# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 243/21 — 1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා — 1976.12.17

243/21 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68 (70)/76.

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மேல், சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**வி. கொபல்லவ,**
**சனாதிபதி.**

கொழும்பு,
1976 டிசெம்பர் 17.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், அவசரகால (நிறுவைகள் அளவைகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (158 ஆம் அத்தியாயமான) நிறுவைகள், அளவைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளிலும், அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளினும் எது எப்படியிருப்பினும், இவ்வொழுங்குவிதிகள் பயனுடையனவாதல் வேண்டும்.

3. நிறுவைகள், அளவைகள் பரிசோதகர் எவரும், அல்லது விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர் எவரும்—

(அ) (ஏதேனும் உள்ளூராதிகாரசபையின் நிருவாக எல்லைகளினுள் உள்ள ஏதேனும் இடப்பரப்பு (உட்பட) இத்தீவினுள்ள ஏதேனும் இடத்தில் அல்லது இடப்பரப்பில் ஏதேனும் வியாபாரத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் எவையேனும் வளவுகளினுள் நுழையவும், வாங்குநரொருவரிடம் பண்டங்களை ஒப்படைக்கும் நோக்கத்துக்காகச் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டுள்ள ஏதேனும் நிறுத்தலை அல்லது அளத்தலைச் சரிபார்க்கவும் ; அத்துடன்

(ஆ) 1971 இன் 7 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான அக்கட்டளைச்சட்டத்தின் 44 ஆ என்னும் பிரிவின் கீழான தவறொன்று தொடர்பிலான ஏதேனும் குற்ற வழக்குத் தொடுக்கும் நோக்கத்துக்காக, சொல்லப்பட்ட 44ஆ என்னும் பிரிவுக்கு முரணாக அவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ள எவையேனும் பண்டங்களை, அவசியமானவிடத்து, கைப்பற்றவும் தடுத்துவைக்கவும், தத்துவமுடையவராயிருத்தல் வேண்டும்.

4. நியமங்கள் முதுகணர், அக்கட்டளைச் சட்டத்தின் கீழான குற்ற வழக்கெதுவும் இத்தீவினுள்ள எப்பாகத்திலும் தொடுக்கப்படுவதற்கென அனுமதியளிப்பதற்குத் தத்துவமுடையவராயிருத்தல் வேண்டும்.

5. இவ்வொழுங்கு விதிகளில்—

"நிறுவைகள், அளவைகள் பரிசோதகர்" என்பது, அக்கட்டளைச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட நிறுவைகள், அளவைகள் பரிசோதகர் எனப் பொருளாகும்.

"உள்ளூராதிகார சபை" என்பது, மாநகரசபை, நகரசபை, பட்டினசபை, அத்துடன் கிராமசபை என்று பொருளாவதோடு அநுராதபுரப் பாதுகாப்புச் சபையையும் உள்ளடக்கும் ;

"கட்டளைச் சட்டம்" என்பது, (158 ஆம் அத்தியாயமான) நிறுவைகள், அளவைகள் கட்டளைச்சட்டம் எனப் பொருளாகும் ;

"விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்" என்பது, (173 ஆம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பரிசோதகர் ஒருவர் எனப் பொருளாகும் ;

"நியமங்கள் முதுகணர்" என்பது, கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நியமங்கள் முதுகணர் என்று பொருளாகும் என்பதோடு, பிரதி நியமங்கள் முதுகணரையும் உள்ளடக்கும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது